# பெருந்தோட்டத் துறையில் பெற்றோர்களின் கல்வியும் மாணவர்களின் இடைவிலகலும்

Yogamalar Rajaratnam[1] and Santhirasegaram S.[2]

Department of Economics, University of Jaffna, Sri Lanka.

**ஆய்வுச்சுருக்கம்**

இந்த ஆய்வானது ''பெருந்தோட்டத் துறையில் பெற்றோர்களின் கல்வியும் பாடசாலை மாணவர்களின் இடைவிலகலும்'' என்னும் தலைப்பில் கொடகவெல பிரதேச செயலர் பிரிவை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இரத்தினபுரி மாவட்டத்தில் கொடகவெல பிரதேச செயலர் பிரிவிக் கீழ் இயங்கும் க.பொ.த (சா.்.த) வகுப்புக்கள் வரைக் கொண்ட 5 பெருந்தோட்ட பாடசாலைகளுள் 2014 ஆம் ஆண்டு அதிகளவான இடைவிலகிய மாணவர்களைக் கொண்ட மாதம்பை இல-02 தமிழ் வித்தியாலயப் பாடசாலையானது ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டு அப்பாடசாலையிலிருந்து இடைவிலகிய 50 மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்களில் 40 மாணவர்கள் எளிய எழுமாற்று மாதிரி எடுப்பின் ஒரு முறையான லொத்தர் முறையினைப் பயன்படுத்தி மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து, நேர்காணல், உரையாடல், அவதானித்தல் மற்றும் உற்று நோக்கல் ஊடாக ஆய்வாளரால் தகவல்கள் பெறப்பட்டன. மேலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், இடைவிலகிய பிள்ளைகளின் பெற்றோர்கள் போன்றோருடன் பேட்டி கண்டும் ஆய்வாளரால் தகவல்கள் பெறப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் சமூக விஞ்ஞானத்துக்கான புள்ளவிபரவியல் பொறி (ளுவயவளைவஉையட ியஉமயபந கழச ளழஉயைட ளஉநைஉெந) மென்பொருட்களைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு பெருந்தோட்டத்துறையில் பெற்றோர்களின் கல்விக்கும் மாணவர்களின் இடைவிலகலுக்குமிடையே (-) எதிர்கணிய தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டது. இதன்படி பெற்றோர்களின் கல்வித் தகைமை குறைவடையும் போது பிள்ளைகளின் இடைவிலகல் அதிகரிக்கும் மாறாக பெற்றோர்களின் கல்வித் தகைமை அதிகரிக்கும் போது பிள்ளைகளின் இடைவிலகல் குறைவடையும் என்பது ஆய்வின் மூலம் பெறப்பட்ட முடிவாகும். மேலும் ஆய்வின் மூலம் வேறு பலக் காரணிகளும் மாணவர்களின் இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்திருந்தமையையும் கண்டறியக்கூடியதாக இருந்ததோடு முக்கியமான சில காரணங்களுக்கு முன்வைக்கக் கூடிய பொருத்தமான பரிகார நடவடிக்கைகள் என்ற வகையில் மாணவர் இடைவிலகலை குறைக்கவும் இடைவிலகிய மாணவர்களின் மீள்கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்தவும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ற வகையில் கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் சில ஆய்வாளரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** பெருந்தோட்டத் துறை,கல்வி